## மேலதிக தகவல்களைப் பெற

உங்களுடைய சூழ்நிலைகளைப் பற்றியும், எப்படி உங்களுக்கு எங்களால் உதவ முடியும் என்பதைப் பற்றியும் பேச  எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

1300 09 HOME (1300 094 663) இல் எங்களை அழைக்கவும் அல்லது assistedreturns.com.au க்கு வருகை தரவும்



இற்றைப்படுத்தப்பட்டது ஏப்ரல் 2020

# homeward

உதவியுடன் திரும்பிச் செல்லும் திட்டம்



Sri Lankan Tamil

# நாம் எப்படி உதவ முடியும்

உதவியுடன் திரும்பிச் செல்லும் திட்டம் குடிமக்கள் அல்லாதவர்களுக்கு சுயவிருப்பப்படி ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேறுவதற்கான விருப்பத்தேர்வுகளை வழங்குகிறது. உங்கள் தேவைகளை நாங்கள் கேட்கிறோம், உங்கள் தெரிவுகளை மதிக்கிறோம்,அத்துடன் உங்கள் பயணத் திட்டங்களுக்கு உதவ நாளது வரையிலான தகவல்களை உங்களுக்கு வழங்குகின்றோம்.

## உங்கள் செலவுகள் கொடுக்கப்படும்

நீங்கள் தகுதியுடையவராக இருந்தால், உங்களுடைய அங்கீகரிக்கப்பட்ட பயண செலவுகள் இந்தத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்படும்.

## எங்களைத் தொடர்பு கொள்வது எளிது

நாங்கள் எவ்வாறு உதவ முடியும் என்பது பற்றிய மேலதிக தகவல்களுக்கு, assistedreturns.com.au எனும் இணையத்தைப் பார்க்கவும் அல்லது 1300 09 HOME (1300 094 663) இல் எங்களை அழைக்கவும்.

### யார் தகுதியுடையவர்

ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேற வேண்டும் என நீங்கள் தீர்மானித்தவுடன், உள்நாட்டலுவல்கள் துறை உங்கள் தகுதியை மதிப்பீடு செய்யும்.

### எங்களுடன் நட்புமுறையில் உரையாடுங்கள்

உங்கள் சூழ்நிலையைப் புரிந்து கொள்ள நாம் விரும்புகிறோம் உங்களுக்கு விடயப் பணியாளர் ஒருவர் ஒதுக்கப்படுவார்.அவர், உங்கள் தேவைகளைக் கேட்டு அவற்றைச் சிறப்பாக நிறைவேற்றும் விருப்பத்தேர்வுகளை உங்களுக்கு க் கொடுப்பார்.

### விடயங்களை ஒழுங்காக ஏற்பாடு செய்வோம்

உங்களுக்குத் தகவல்களையும் சரி பார்க்கும் பட்டியலையும் வழங்குவதன் மூலம் நீங்கள் வீட்டிற்குத் திரும்புவதற்கான ஆயத்தத்தைச் செய்வதற்கு நாங்கள் உதவி செய்வோம்.

### ஆவணங்களைத் தயார் செய்வோம்

உங்களுடைய பயணத்திற்கான சரியான ஆவணங்களை வைத்திருப்பதற்குத் தேவையான பயணப் படிவங்களைப் பூர்த்தி செய்ய உங்களுக்கு உதவுவோம்.

### பயணத்தை ஏற்பாடு செய்வோம்

உங்களுக்குத் தேவைப்படும் விமானம், விடுதி மற்றும் விரும்பும் போக்குவரத்து ஆகியவற்றிற்குப் பதிவு செய்வதன் மூலம் உங்கள் பயணத்திற்கு ஏற்பாடு செய்வோம்.

### ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேறல்

புறப்படும் நாள் அன்று, நீங்கள் பயணத்திற்குத் தயாராக இருப்பதை உணர்வீர்கள்.

### வீட்டுக்கு வந்துசேருதல்

வீட்டுக்கு வந்தவுடன் நீங்கள் அன்பானவர்களால் விமான நிலையத்தில் சந்திக்கப்படலாம் அல்லது மேலும் பயண ஏற்பாடு செய்திருக்கலாம் உங்களுக்கு பொருத்தமான தகவல்கள் வழங்கப்படும், எனவே உங்கள் பயணத் திட்டங்களை வெற்றிகரமாக முடிக்க முடியும்.








உள்நாட்டலுவல்கள் துறை சார்பாக இந்தச் சேவை வழங்கப்படுகின்றது